வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

**தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017**

FWC

**Term Examination, November - 2017**

| தரம் :- 13 (2018) | மனைப்பொருளியல் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

- ***1 தொடக்கம் 50 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையை தெரிந்தெடுத்து, அதனைக் குறிக்கும் இலக்கத்தை தரப்பட்ட புள்ளடித்தாளில் (x) அடையாளம் இடுக.***

1. ஒரு குறித்த செயற்பாட்டிற்காக மனையில் ஒதுக்கப்பட்டுள்ள பகுதியை வேறு செயற்பாட்டிற்கு பயன்படுத்தும் தன்மை.
   1. இடவசதி  2. ஒழுங்கமைப்பு  3. அந்தரங்கத்தன்மை
   4. எதிர்பார்ப்பு  5. நெகிழும் தன்மை

2. இயற்கையாக கிடைக்கும் நிறம்.
   1. இடை நிறம்  2. புடை நிறம்  3. துணை நிறம்
   4. முதல் நிறம்  5. நாற்கணிய நிறம்

3. ஈரலிப்பு நிலத்தில் கட்டப்பட்டுள்ள மனையாள் நிலத்தில் தவிர்ப்பதற்கு வீட்டின் தளத்தை எவ்வாறு அமைத்தல்.
   1. தளத்திற்கு மாபிள்கற்கள் பதித்தல்
   2. மணல் மண் நிரப்பி தளம் அமைத்தல்
   3. செம்மன் நிரப்பி தளம் அமைத்தல்
   4. நிலத்திற்கு பொலித்தீன் தாள் விரித்து பின் கொங்கிறீட் இடல்
   5. தளத்திற்கு செங்கற்கள் பதித்தல்.

4. நிலப்பிரதியில் அடங்கும் தளத்திட்டத்தினால் காட்டப்படும் விடயம்.
   1. முன்பக்கத்தோற்றம்  2. காற்றுத்துவாரங்களின் இட அமைவு
   3. அறைகள் அமைந்துள்ள விதம்ங  4. அத்திவாரம் பற்றிய விபரங்கள்
   5. கதவு யன்னல்களின் உயரம்

5. திரைச்சீலை இடும் போது கவனிக்க வேண்டிய விடயம் தொடர்பாக மாணவரால் முன்வைத்த விடயங்கள்
   A. சிறிய யன்னலுக்கு நீளமான திரைச்சீலை இடல்
   B. ஒளி வளி உட்புகாத திரைச்சீலை தெரிதல்
   C. அறையின் நீளத்திற்கு பொருத்தமான திரைச்சீலை இடல்
   D. விலை கூடிய திரைச்சீலை இடல்
   இவற்றுள் பொருத்தமற்றது.
   1. AB  2. BC  3. AC  4. CD  5. BD

6. வரையறுக்கப்பட்ட இடவசதி உள்ள ஒரு இடத்தில் பல்வேறு செயல்களைச் செய்யத்தக்கவாறு மனையைத் திட்டமிடுவதற்கு ஏற்ற இலகுவான ஒரு முறை.
   1. ஒழுங்கு முறை மூலதனம்  2. இசைவு  3. சமச்சீரில் சமநிலை
   4. விகிதசமன்  5. சமச்சீரின் மச்சமநிலை

The Nation's Learning Portal for the General Education

7. எல்லாப் பக்கங்களில் இருந்து இரசிக்கக்கூடிய மலர் ஒழுங்கு.
1. ரேகை மலர் ஒழுங்கு 2. கூட்டுமலர் ஒழுங்கு 3. S வடிவமலர் ஒழுங்கு
4. சுதந்திரமான மலர் ஒழுங்கு 5. L வடிவமலர் ஒழுங்கு

8. துணை நிறமான பச்சை தோன்றுவதற்கு பயன்படும் முதல் நிறங்கள்
1. சிவப்பு + பச்சை 2. சிவப்பு + நீலம் 3. சிவப்பு + மஞ்சள்
4. மஞ்சள் + நீலம் 5. மஞ்சள் + ஊதா

9. போசணைப் பொருளுடன் நைத்திரிக்கமிலம் சேர்க்கும் போது மஞ்சள் நிறமாகத் தோன்றும் அப்போசணை.
1. காபோவைதரேற்று 2. கொழுப்பு 3. புரதம்
4. விற்றமின் 5. கனியுப்பு

10. பின்வரும் உணவுகளில் கல்சியம் கூடுதலாக காணப்படுவது.
1. எள்ளு 2. இளநீர் 3. பலாவிதை 4. அவரை 5. சூரியகாந்தி

11. நீரில் கரையாத போசணைகள் எத்தொகுதியில் அகத்துறிஞ்சப்படுகிறது?
1. களம் 2. வாய் 3. எலும்புத் தொகுதி
4. நிணநீர்த் தொகுதி 5. இரைப்பை

12. சதையச் சாற்றில் அடங்கியுள்ள சமிபாட்டு நொதியம்.
1. கொலத்திரோல் 2. பிலிமூபின் 3. நீர்
4. சீதம் 5. கைமோதிரிப்சின்

13. கல்சியம் அகத்துறிஞ்சலைத் தடுக்கும் ஓமோன் எது?
1. பராதைரொயிட் 2. கஸ்ட்றின் 3. இன்சுலின்
4. கோடிசோல் 5. அசுகோபிக்கமிலம்

14. பற்றீரியா மூலம் உடலில் உருவாகும் விற்றமின்
1. K.B 2. B.C 3. $AB_{12}$ 4. AK 5. $B_{12}C$

15. இழைய உற்பத்திக்கு அவசியமான, கொலஜன் உற்பத்திக்கு அவசியமான விற்றமின் எது?
1. A 2. B 3. C 4. D 5. E

16. A. கிளைக்கோஜன் B. கொழுப்பு உற்பத்தி C. சக்திவிடுவித்தல்
D. குருதி சுற்றோட்டத்திற்குள் தொழிற்படல்.
இச்செயற்பாடுகள் சமிபாட்டுச் செயற்பாட்டில் நடைபெறும் இடம்.
1. இரைப்பை 2. ஈரல் 3. முன்சிறுகுடல்
4. சிறுகுடல் 5. பெருங்குடல்

17. பைடிக்கமிலம் கூடுதலாகக் காணப்படுவது,
1. கிழங்கு 2. இலைவகை 3. தானியத்தின் மேற்தோல்
4. தானியம் 5. கீரைவகை

18. எவ்விற்றமின் குறைவாக அகத்துறிஞ்சப்பட்டு மிகுதி மலத்துடன் வெளியேறும்.
1. B 2. A 3. C 4. D 5. E

19. நீரில் கரையும் விற்றமின் எதன் மூலம் அகத்துறிஞ்சப்படும்.
1. வாயில் நாளம் 2. குருதி மூலம் 3. தொகுதி நாடி
4. சடைமுளை 5. சிறுகுடல்

20. சாந்தி 400g அங்கர் பால்மா பெட்டி ஒன்றை கொள்வனவு செய்துள்ளார் இப்பொதியானது,
1. முதலாம் நிலைப் பொதியிடல் 2. ஆரம்ப நிலைப் பொதியிடல்
3. இரண்டாம் நிலைப் பொதியிடல் 4. மூன்றாம் நிலைப் பொதியிடல்
5. நான்காம் நிலைப் பொதியிடல்



The National e-learning portal for The General Education

21. இலங்கையில் குறைபோசணை நிலைமையைச் சீர் செய்யும் நோக்குடன் பாடசாலைகளில் வைத்திய பரிசோதனை இடம் பெறும் தரங்கள்
   1. 1,3,7,10   2. 1,4,7,10   3. 1,5,7,9   4. 1,3,9,10   5. 1,5,7,11

22. பாடசாலை மாணவர்களுக்கு வாய்வழியாகப் பெற்றுக் கொடுக்கப்படும் விற்றமின் A யின் சர்வதேச அலகு?
   1. ஆயிரம் சர்வதேச அலகுகள்   2. பத்தாயிரம் சர்வதேச அலகுகள்
   3. நூறாயிரம் சர்வதேச அலகுகள்   4. ஆறாயிரம் சர்வதேச அலகுகள்
   5. நூறு சர்வதேச அலகுகள்

23. பாடசாலை சுகாதார சங்கங்கள் மூலமாக ஆற்றப்படும் செயற்பாடு அல்லாதது,
   1. பாடசாலைச் சூழலை சுத்தமாக்குதல்
   2. குடிநீருக்கு குளோரீன் சேர்த்தல், கிணறு இறைத்தல்
   3. சுகாதார செய்திகளைப் பரிமாறல்
   4. சுகாதார பிணியாய் நிலையங்களுடன் தொடர்புபடுதல்
   5. தரமான கல்வியை மாணவர்கட்டு வழங்குதல்

24. மலர் ஒழுங்கு தொடர்பாக மாணவர்கள் முன்வைத்த சில விடயங்களுள் சரியானது எது?
   1. கிளைகளும், இலைகளும் மலர் ஒழுங்கில் அடியில் ஒழுங்கமைக்கப்படும்.
   2. வாசனையற்ற மலர்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன.
   3. மலரொழுங்கு செய்வதற்கு உயரம் கூடிய பூந்தாழிகள் பயன்படுத்தப்படுகின்றன.
   4. பூந்தாழியின் உயரத்தின் 1 1/2 மடங்கு மலரின் தண்டின் நீளம் அமைதல் வேண்டும்.
   5. தனிநிறம் பின்னணிக்கு மலர் அலங்காரம் மிகப் பொருத்தமற்றதாகும்.

25. பின்வரும் பல்வேறு வீடுகளில் அவதானிக்கப்பட்ட சில கட்டமைப்பு இயல்புகள் ஆகும்.
   A. கொன்கிரிட் தூண்கள் அமைத்து அதன்மேல் வீடு கட்டப்பட்டு இருத்தல்
   B. படுக்கை அறைக்கும் நடுவில் கதவு வைத்திருந்தமை.
   C. மின் வடங்கள் புவியுடன் தொடர்புபடுத்தலுக்கான ஆனி பயன்படுத்தப்பட்டுள்ளமை.
   D. படுக்கையறை, குளியலறை ஆகியவற்றின் யன்னல்களுக்கு ஒளி தெறிப்படையும் கண்ணாடி பயன்படுத்தப்பட்டுள்ளமை.
   இவற்றிலிருந்து மனைக்கோட்பாடு ஏற்ப அமைக்கப்பட்ட விடயங்கள்
   1. A,B,C   2. A,C   3. A,E   4. A,B   5. A,D,E

26. சிறுநீரக நோய், இதய நோய், நரம்பிழையங்களின் செயற்பாடு தடைப்படல் போன்ற சிக்கலை ஏற்படுத்துவதற்கு காரணமான கனியுப்பு.
   1. கல்சியம்   2. பொஸ்பரஸ்   3. மக்னீசியம்
   4. நாகம்   5. இரும்பு

27. சமிபாட்டுக்கு பயன்படாத நொதியம்.
   1. திருச்சின்   2. பெப்சின்   3. இலிப்பேசு
   4. மோல்ரோஸ்   5. அமிலேசு

28. திரான்ஸ் கொழுப்பமிலம் அடங்கியுள்ள உணவுப்பொருள்
   1. சீஸ்   2. தயிர்   3. மாஜரீன்   4. ஜாம்   5. நெய்

29. மூளை, நரம்புகள், ஈரல், சிறுநீரகம், இதயம் போன்ற பகுதிகளில் சேமிக்கப்பட்டுள்ள கொழுப்பு,
   1. இலிப்போ புரதங்கள்   2. பொசுபோ கிளிசரறைட்டுக்கள்
   3. பொசுபோ இலிப்பிட்டுக்கள்   4. உயர் அடர்த்தியுள்ள இலிப்போ புரதங்கள்
   5. கிளிசரோல்

30. ஒருவருடைய நிறை, உயரம் ஆகியன முறையே 60kg உம் 145cm உம் ஆகும். அவருடைய உடற்திணிவுச் சுட்டிப்பெறுமானம்
   1. 30.2   2. 28.6   3. 26.1   4. 18.6   5. 20.3

31. பின்வருவன இரைப்பை அழற்சி தொடர்பாக மாணவரால் எழுதப்பட்ட குறிப்பிலிருந்து எடுக்கப்பட்ட சில விடயங்கள் ஆகும். இவற்றுள் தவநாள கூற்று எது?
   1. பாலும் பால் உணவுப் பொருட்களும் மிக உகந்தவையாகும்.
   2. இலகுவான சமிபாடடையக் கூடிய மென்மையான உணவு வழங்கப்படல் வேண்டும்.
   3. அதிகப் புகை பிடித்தலும் அதிக மதுபானம் அருந்துதலும் உகந்ததல்ல.
   4. போசணை உணவுகளைத் தவறவிடுதல் கூடாது.
   5. அடிக்கடி சிறு உணவு வேளைகள் விரும்பத்தக்கது.

32. நொதியக் கபில நிறமாதலின் செயற்பாட்டின் போது உருவானது,
   1. கீற்றோன்
   2. அல்டிகைட்
   3. பொலிபீனோல்
   4. பீனோல்
   5. பொலினோல் ஒக்சிடேஸ்

33. தொட்டியில் அடங்கிய நீரை தூய்மையாக்கிய சுத்திகரிக்க ஆயிரம் லீற்றர் நீருக்கு பயன்படுத்தப்படும் குளோரினின் அளவு.
   1. 10g
   2. 5g
   3. 8g
   4. 7g
   5. 50g

34. பின்வரும் தையல் முறைகளில் தையலின் அடிப்படை முறைகளும், அலங்கார முறைகளும், நுட்ப தையல் முறைகளும் முறையே காணப்படும் கூற்று.
   1. சிறுநூடல், கம்பளித்தையல், தட்டைப்பொருத்து
   2. சோம் தையல், தட்டைப் பொருத்து, பிரான்சிய முடிச்சு
   3. பெரும் நூலோடி, மேற்செறிப் பொருத்து, அடுக்கு நாணயவுரு.
   4. தோற்றாத் தையல், முடிச்சுத் தையல், நீளுஞ் குறுந்தையல்
   5. தட்டைப் பொருத்து, கம்பளித்தையல், சிறு நூலோடல்

35. காலை உணவு வேளையொன்றில் அடங்கியுள்ள மொத்த சக்தியின் அளவு 55ப கிலோ கலோரியாகும். அதில் 15g புரதமும் 10g கொழுப்பும் அடங்கியுள்ளன. இவ்வுணவு வேளையில் அடங்கியுள்ள காபோவைதரேற்றின் அளவு.
   1. 80g
   2. 90g
   3. 100g
   4. 110g
   5. 120g

36. பால், சீனி, உருளைக்கிழங்கு ஆகிய உணவுப் பொருள்களில் அடங்கியுள்ள காபோவைதரேற்றுக்கள் ஆவன முறையே,
   1. குளுக்கோசு, பிரற்றோசு, அமைலோ பெக்ரின்
   2. லக்றோசு, குளுக்கோசு, பெக்ரின்
   3. அமைலோசு, மோல்ரோசு, இனியுலின்
   4. லக்ற்றோசு, சுக்குரோசு, மாப்பொருள்
   5. கவற்றோசு, டெக்ஸ்ரின்,செலுலோசு

37. புண் இலகுவில் ஆறாமை, முரசில் குருதி கசிதல் ஆகிய நோய் அறிகுறிகள் பின்வரும் எந்த விற்றமின் குறைபாட்டினால் ஏற்படும்.
   1. விற்றமின் A
   2. விற்றமின் B
   3. விற்றமின் $B_2$
   4. விற்றமின் C
   5. விற்றமின் E

38. ஒமேக - 3 அமிலங்களைக் கொண்ட உணவு மூலங்கள் அடங்கிய தொகுதி.
   1. சூரை, சமன், கீரி
   2. சுறா, பாரை, நண்டு
   3. இறால், கணவாய், நண்டு
   4. மக்கரன், கெனிறு, முரல்
   5. சூரை, சானை, விரலி

39. உயர் குருதி அமுக்க நோயாளி ஒருவர் உணவில் செய்ய வேண்டிய மாற்றங்களில் தவறான கூற்று,
   1. உப்பு பாவனையைக் குறைத்தல்
   2. பொற்றாசியம் குறைவான உணவை உட்கொள்ளல்.
   3. சீனி அடங்கிய உணவை உட்கொள்வது பொருத்தமானது.
   4. மீன், மீணெண்ணைய் ஆகியவற்றை உணவாக உட்கொள்வது பொருத்தமானது.
   5. தினமும் உடற்பயிற்சி செய்வது மிகப்பொருத்தமானது.

40. நரம்பு நாளங்களைச் சுற்றியுள்ள மயலின் உறைகளின் ஆக்கத்திற்கு உதவும் B தொகுதி விற்றமின்.
1. $B_1$ 2. $B_2$ 3. $B_{12}$ 4. $B_3$ 5. $B_6$

41. மாவையும் கொழுப்பையும் விரல் நுனிகளால் பிஸ்கட் தூள் போல் கலந்து தயாரிக்கும் பேல்ரி வகை.
1. பப்பேஸ்ரி 2. சூபேஸ்ரி 3. சோக்கிரஸ்ட் பேஸ்ரி
4. பற்றீஸ் பேஸ்ரி 5. பான்கேக்

42. பொதிகளுள் உட்செலுத்தப்படுகின்ற வாயு.
1. $N_2$ 2. $O_2$ 3. $CO_2$ 4. $H_2$ 5. CA

43. இளநிறமுடைய பழங்கள், காய்கறிகளுடன் கந்தகவீரொட்சைட்டு எவ்வளவு சேர்க்கப்படும்.
1. 2000 - 3000 ppm 2. 4000 - 5000 ppm 3. 1500 - 3000 ppm
4. 1000 - 3000 ppm 5. 2500 - 5000 ppm

44. நொதித்தலின் போது எவ் உயிர்ச்சத்துக்களின் அளவு அதிகரிக்கும்.
1. D யும் C யும் 2. D யும் K யும் 3. A யும் B யும்
4. E யும் K யும் 5. A யும் B யும்.

45. நுண்ணங்கிகள் அதிகமாக வளர்வதற்குரிய அறைவெப்பநிலை யாது?
1. $20^oC$ - $30^oC$ 2. $18^oC$ - $^oC$ 3. $30^oC$ - $35^oC$
4. $20^oC$ - $35^oC$ 5. $50^oC$ - $65^oC$

46. அனுமதிக்கப்பட்ட நாளாந்த போசணைத் தேவை அட்டவணையின் குறியீட்டு யாது?
1. R D A 2. A N p 3. R D R 4. A - pA 5. R A D

47. அன்னாசிப் பழத்தில் காணப்படும் புரதத்தின் அளவு.
1. 0.2g 2. 0.3g 3. 0.4g 4. 0.5g 5. 0.8g

48. பச்சை மிளகாயில் உள்ள நிறப்பொருள்.
1. கப்சன்தீன் 2. வயிற்கோபிள் 3. குறோபில்
4. கரட்டின் 5. கோலின்

49. பின்வருவனவற்றுள் நெசவு செய்யப்படாத நார் எது?
1. பட்டு 2. பருத்தி 3. கம்பளி
4. லினன் 5. நைலோன்

50. ஒரு குழந்தை விரல் சூப்புவதற்கான காரணம்.
1. இலக்குகளை அடையாமல்
2. உடற்குறைபாடு
3. கோழையான தன்மை
4. மனநிறைவு பெறல்
5. போசணைப் பிரச்சினை

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, நவம்பர்- 2017
## Term Examination, November - 2017

| தரம் :- 13 (2018) | மனைப்பொருளியல் - II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

- *1ம் வினாவும் வேறு இரண்டு வினாக்களுகம் உட்பட மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.*

(1) தரம் 13 மாணவருக்கு மனை உள்ளக அலங்காரம் பற்றி கற்பிக்கமுற்பட்ட ஆசிரியர் உள்ளக அலங்காரம் அடங்கிய வீடியோ காட்சியை மாணவருக்கு காண்பித்தார். அதில் மாணவர்கள் தாம் பார்வையிட்ட விடயங்களை குறிப்பாக குறித்துக் கொண்டனர் அவற்றில் சில கீழே தரப்பட்டுள்ளது. மனை அலங்கரிப்பிலுள்ள பல்வேறு முறைகள்

* மனைக்கு திரைச்சீலையிடும் முறைகள்
* மனையின் பல்வேறு இடங்களுக்காக மலர் ஒழுங்குமுறைகள்
* தளபாட ஒழுங்கும் துணையணிகளும்

(i) மனை அலங்கரிப்பில் திரைச்சிலை இடும் போது கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?
(ii) திரைச்சீலை இடும் முறைகள் இரண்டைத்தந்து ஒன்றை வரிப்படம் மூலம் விளக்குக.
(iii) மனை உள்ளக அலங்கரிப்பில் சந்தம் பயன்படுத்தப்படும் விதத்தை உதாரணம் தந்து விளக்குக.
(iv) மனையலங்காரத்தில் துணையணிகள் பயன்படுத்துவதன் அனுகூலங்கள் எவை?
(v) மனையின் பகுதிகளை வடிவமைப்பு செய்யும் போது கோடுகள் பயன்படும் சந்தர்ப்பங்களை ஒவ்வொரு உதாரணம் தந்து விளக்குக.

(25புள்ளிகள்)

(2) (i) மனை நிர்மாணித்தலில் பயன்படும் கோட்பாடு இரண்டைத் தந்து அதில் ஒன்றை விளக்குக?
(ii) "12 x 10" அமைக்கப்பட்ட வரவேற்பறைக்கு தளபாட ஒழுங்கு இடப்படும் முறையே விபரிக்க?
(iii) மனை முகாமைத்துவத்தில் நேரம் இன்றியமையாத ஒன்றாகும் நேரத்தை சிக்கனப்படுத்த மனையாள் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடுகள் விபரிக்க?
(iv) மனைக்கழிவுகளை முகாமை செய்வது முக்கியமாகும் மனைக்கழிவுகளை முகாமை செய்யும் முறை ஒன்றை தந்து விபரிக்க? (20 புள்ளிகள்)

(3) (i) சிறு மேசை விரிப்பொன்றை ஆக்கும் போது அதன் நேர்த்தி பேண விளிம்பு தைக்கப்பட்டது. விளிம்பு நேர்த்தி ஆக்கும் முறைகள் 4 தருக?
(ii) நார்களை இனங்காண பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் அவற்றில் பௌதீகமுறை பரிசோதனைகள் 4 தருக.
(iii) மாணவரின் தையல் செயன்முறைக்காக பல்வேறு தையல் முறைகள் அடங்கிய காட்சி வீடியோவாக காட்சிப்படுத்தப்பட்டு செயன்முறை விளக்கமும் வழங்கப்பட்டது.
a) தையல் செயன்முறைக்கு பயன்படுத்தக்கூடிய அலங்கார, நுட்ப தையல்கள் இவ்விரண்டு தருக?
b) சாப்பிட்டு மேசைக்கு உகந்த காட்டுரு வரைந்து அதற்கு பொருத்தமான அலங்கார தையல் நிற பொருத்தப்பாடு பற்றி விளக்குக. (20புள்ளிகள்)

(4) (i) சேலை ரவிக்கைக்கான முன்பக்க மாதிரியுரு அமைக்கும் முறையை வரிப்படம் மூலம் காட்டுக.

(ii) வீட்டின் உள்ளக அலங்கரிப்பில் குளங்கள், நீழ்வீழ்ச்சி, நிலாமுற்றம் அமைக்கும் போதும், பராமரிக்கும் போதும் கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்களை விபரிக்க?

(iii) மாணவி ஒருவர் கடையில் வாங்கிய நீரைப் பருகியதால் வயிற்றோட்டம், காய்ச்சலால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டாள் இதற்கு காரணம் சுத்தமான நீர் பருகாமையே என வைத்திய அறிக்கை கூறப்பட்டது.

a) கடையின் உரிமையாளருக்கு, சுகாதார வைத்திய அதிகாரியால் கூறக்கூடிய நீர் சுத்திகரிப்பு முறைகள் எவை?

b) மேலே கூறப்பட்ட சுத்திகரிப்பு முறையில் ஒன்றை விபரிக்க? (20 புள்ளிகள்)

## பகுதி - II

*** 5ம் வினாவுக்கும் வேறு மூன்று வினாக்கள் உட்பட நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக**

(5) பாடசாலை ஒன்றில் சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரால் தொற்ற நோய்கள் பற்றி அறிவுரைகள் வழங்கப்பட்டது. அதில் எவ்வாறு தொற்றா நோய்கள் ஏற்படுகிறது.

தொற்றா நோய்களை ஏற்படுவதில் இன்றைய சமூதாய கைக்கொள்ளும் அன்றாட பழக்கவழக்கம் பற்றியும், அவ் தொற்றா நோய்களை குறைக்கபாடசாலை ரீதியாகவும், பிரதேச ரீதியாகவும், நாடு ரீதியாகவும் மேற்கொள்ளக்கூடிய செயற்பாடு பற்றியும் கலந்துரையாடினார்.

i) எமக்கு ஏற்படக்கூடிய தொற்ற நோய்கள் 5 தருக?

ii) மேற்குறித்த தொற்றா நோய்களில் ஒன்றால் பாதிக்கப்பட்ட நோயாளி (நோய்குறிப்பிடவேண்டும்) க்கு பொருத்தமான மதிய உணவை திட்டமிடுக. / அவ்வுணவு தெரிவு செய்தமைக்கான காரணங்களையும் தருக.

iii) பின்பிள்ளை பருவத்தினரின் உடல் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் எவை?

iv) கட்டிளம் பருவ பிள்ளைகளிற்கு தேவையான விசேட போசணைகள் இரண்டைக் குறிப்பிட்டு அவை ஒவ்வொன்று அவர்களின் உடற் தொழிற்பாட்டிற்கு எவ்வாறு உதவும் என்பதை விளக்குக.

v) நாட்டின் போசாக்கு குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக பாடசாலை மட்டத்தில் செயற்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் எவை? (25 புள்ளிகள்)

(6) (i) a) சில உணவுப் பொருட்களில் போசணைக் குறைபாடுகள் காணப்படாவிடினும் அவற்றில் அடங்கியுள்ள சில போசனைக் கூறுகளின் அளவை வேறு வழிகளில் அதிகரிக்கச் செய்யலாம் அவ்வாறான செயற்பாடுகள் எவை?

b) மேற்குறித்த போசணை கூறுகள் அதிகரித்தல் செயற்பாடுகளில் ஒன்றினால் உணவிற்கு கிடைக்கும் மாற்றங்கள் 4 தருக.

(ii) தரம் 12 ல் கல்விகற்கும் மாணவி சுமதி தனது BMI ஐ கணிப்பீடு செய்திருந்தாள். அதன் அளவு 26.3 ஐ காட்டியது. இதிலிருந்து அவள் BMT சராசரி அளவிலும் கூடுதலாக உள்ளார் என்பதை அறிய முடிகிறது. எனவே அவளுக்கு ஏற்படக்கூடிய நோய் விளைவுகளை குறிப்பிடுக.

(iii) வெற்றிகரமாக உணவு வேளையை திட்டமிட ஆதாரமாக அமையும் மூலதாரங்களைத் தந்து அதில் ஒன்றின் முக்கியத்துவத்தை விளக்குக. (20 புள்ளிகள்)

07.i. கர்ப்பிணித்தாய்க்கு அவசியமான போசனைத் தேவைகள் மூன்றை குறிப்பிட்டு அதில் ஒன்றின் அவசியத்தை விளக்குக?

ii. கர்ப்பிணித் தாய்க்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய காரணிகள் 4 தருக?

iii. கர்ப்பிணித்தாய் பிணியாய் நிலையத்திற்கு சமூகமளிப்பது இன்றியமையாத ஒன்றாகும். பிணியாய் நிலையத்தில் மேற்கொள்ளப்படும் சேவைகள் 4 தருக?

iv. முன்பிள்ளைப் பருவபிள்ளைகளை அபிவிருத்தி நிலையத்தில் குழுவாக செயற்பட வழிப்படுத்துகின்றார்கள். இதனால் பிள்ளையில் ஏற்படக்கு கூடிய மாற்றங்கள் எவை?

(20 புள்ளிகள்)

08. i. உணவுச்சாமிபாடு என்பதை வரைவிலக்கணப்படுத்துக?

ii. இரைப்பை சுழற்சி (GastLitls) ஏற்படுவதற்கான காரணங்கள் எவை?

iii. கல்சியத்தின் தொழிற்பாடுகள் நான்கினை விபரிக்க ?

iv பின்பிள்ளை பருவத்தினர் வெளிக்காட்டும் மனவெளிச்சிச் செயற்பாடுகள் விபரிக்க?

(20 புள்ளிகள்)

09. i. பின் பிள்ளை பருவ பிள்ளைகள் சமூக வாழ்வின் போது காணப்படக்கூடிய சாதக நடத்தை கோலங்கள் எவை?

ii கட்டிளம் பருவத்திரை ஈடுபடக்கூடிய சமூக விரோதச் செயல்களை பட்டியலிடுக?

iii. உணவு நற்காப்பில் பிரயோகிக்கப்படும் பிரதான உத்திகள் எவை? அவை ஒவ்வொன்றுக்கும் உதாரணம் தருக?

iv. இடவசதி குறைந்த இடத்தில் 200 பேர் கலந்து கொள்ளும் மதிய விருந்துக்கு உகந்த பரிமாறல் முறை எது? வரிப்படம் முலம் தருக.

(20 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education